கவனிக்க - 12.09.2025 ஆந் திகதிய 2454 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2455 - 2025 සැප්තැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.09.19**

2455 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 742 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | 742 |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 743 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கடுவெல மாநகர சபை**

குறைநிரப்பு வரி - 2025

கடுவெல மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டின் குறை நிரப்பு வரவு செலவுத்திட்ட ஆவணம் 2025, செத்தெம்பர் 19 ஆம் திகதியில் இருத்து 2025, செத்தெம்பர் 29 ஆந் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் கடுவெல மாநகர சபையின் பிரதான அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதென 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 214 ஆவது பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜி. ஏ. ரஞ்சன் ஜெயலால் பெரேரா,
மாநகர முதல்வர்
கடுவெல மாநகர சபை.

கடுவெல மாநகர சபை அலுவலகம்,
கடுவெல,
2025, செத்தெம்பர் 19.

09 - 177

---

# வரவு செலவுத் திரட்டுகள்

**நவகத்தேகம பிரதேச சபை**

வரவு மற்றும் செலவு பற்றி அறிக்கை

நிதி வெளியீட்டை பிரசித்தப்படுத்தல்

1988 ஆம் ஆண்டு பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) சட்டக்கோவை 216 ஏற்பாடுகளுக்கு அமைய கீழ்க் காணப்படும் உப ஆவனங்கள் குறிப்பிடும் கணக்காய்வு செய்யப்பட்ட நவகத்தேகம பிரதேச சபையின் 2024.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயற்பாட்டறிக்கை மற்றும் 2024.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கையினை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக வெளியிடப்படுகிறது.

உப ஆவனம் I - 2024.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை
உப ஆவனம் II - 2024.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயற்பாட்டறிக்கை

உப ஆவனம் I

**நவகத்தேகம பிரதேச சபை**

2024.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை

| | *2023.12.31* | *2024.12.31* |
|---|---|---|
| | *ரூ. ச.* | *ரூ. ச.* |
| சொத்துக்கள் | | |
| **நடை முறை அல்லாச் சொத்துக்கள்** | | |
| நிலையான சொத்துக்கள் மற்றும் தளபாடங்கள் | 195,574,316.27 | 220,705,292.51 |
| **நடைமுறைச் சொத்து** | | |
| கையிருப்பு | 2,691,438.27 | 2,504,217.89 |
| ஊழியர் கடன்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 5,308,347.66 | 5,520,594.66 |
| பெறவேண்டிய கணக்குகள் | 9,991,631.37 | 9,922,634.12 |
| முதலீடுகள் | 4,480,077.94 | 4,479,594.57 |
| காசும் காசிற்குசமமான வைகளும் | 5,209,134.50 | 7,182,789.81 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **223,254,946.01** | **250,315,123.56** |

| | 2023.12.31 | 2024.12.31 |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| பொறுப்புக்கள் | | |
| நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள் | 9,765,940.70 | 8,835,838.42 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 213,489,005.31 | 241,479,285.14 |
| உரிமை | | |
| **மொத்த உரிமையும் பொறுப்புக்களும்** | **223,254,946.01** | **250,315,123.56** |

உப ஆவனம் II

**நவகத்தேகம பிரதேச சபை**

2024.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயற்பாட்டறிக்கை

| | 2023.12.31 | 2024.12.31 |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| **செயற்பாட்டு வருமானம்** | | |
| அரசின் பங்களிப்பு - மீண்டெழக்கூடிய | 33,520,671.98 | 39,597,155.22 |
| வேறு வருமானங்கள் | 13,080,279.87 | 13,459,044.85 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **46,600,951.85** | **53,056,200.07** |
| **நடைமுறைச் செலவு** | | |
| மீண்டெழும் செலவுகள் | 43,689,444.72 | 49,587,153.63 |
| **மொத்தநடைமுறைச் செலவுகள்** | **43,689,444.72** | **49,587,153.63** |
| **குறித்த ஆண்டிற்கான பெறுமதி மிகை/ (பற்றாக்குறை)** | **2,911,507.13** | **3,469,046.44** |
| மூலதன வருவாய் | 5,920,109.46 | 5,620,909.25 |
| மூலதனச் செலவு | 7,435,895.57 | 6,559,666.46 |
| குறித்த ஆண்டிற்கான தேறியமிகை | **1,395,721.02** | **2,530,289.23** |

09-202

---

# நானாவித அறிவித்தல்கள்

**ஊர்காவத்துறை பிரதேச சபை**

தீர்மான இலக்கம் - 07/16.07.2025

சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நோக்கத்திற்கிணங்க செயற்படும் பிரதேச சபையானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 177 இன் பிரகாரம் மக்களிற்கு பாதிப்பில்லாமல் மயான அபிவிருத்திச்சபை ஒன்றை அமைப்பது எனவும் அதன் மூலம் தகனம் செய்ய அல்லது புதைக்க ரூபா 2000.00 கட்டணம் அறவிடுவது எனவும் சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் - கொளரவ உறுப்பினர் சி.சிவகுமார்
வழிமொழிந்தவர் - கௌரவ உபதவிசாளர் செபஸ்தியாம்பிள்ளை லெனின் றஞ்சித்.

09 - 151

**நாகொடை பிரதேச சபை**

திருத்தம்

நாகொடை பிரதேச சபையால் 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5.1.11 இன் கீழ், கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, நாகொடை பிரதேச சபை 2025 ஆம் ஆண்டுக்கான தகனக் கட்டணங்களைத் திருத்தியமைத்து புதிய கட்டணங்களை விதித்துள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

தர்மசிறி கணேவத்த,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை அலுவலகம்,
2025, ஓகத்து 14.

**அட்டவணை**

| *விபரம்* | *அறவிடப்படும் கட்டணம்* | |
|---|---|---|
| | *அதிகார எல்லைக்குள்* | *அதிகார எல்லைக்கு அப்பால்* |
| ஒரு சடலத்தை தகனம் செய்ய (மு.ப. 10.00 பி.ப. 2.00, மு.ப. 4.00, பி.ப. 6.00) | ரூ. 10,000.00 | ரூ. 12,000.00 |
| விண்ணப்பப் பத்திரக் கட்டணம் | ரூ. 250.00 | ரூ. 250.00 |

09-186